**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.94** **நாள் : 16.07.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெருநாய்களுக்கு மாபெரும் அளவிலான வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி மற்றும் அக, புற ஒட்டுண்ணிகள் நீக்கும் திட்டம் இன்று முதல் செயல்படுத்தப்பட உள்ளது என ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

"வெறிநாய்க்கடி நோய் இல்லாத சென்னை மாநகரம்" என்ற இலக்கை அடைய பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் உத்தரவின்படி, பொதுசுகாதாரத்துறை, கால்நடை மருத்துவப்பிரிவின் சார்பில் தெருநாய்களுக்கு மாபெரும் அளவிலான வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி போடுதல் மற்றும் அக, புற ஒட்டுண்ணிகள் நீக்கும் திட்டம் இன்று முதல் செயல்படுத்தப்பட உள்ளது.

கால்நடை மருத்துவ அலுவலர், மண்டல அலுவலர் மற்றும் பொதுசுகாதாரத்துறை அலுவலர்கள் ஆகியோரின் மேற்பார்வையில் முதற்கட்டமாக மாதவரம் மண்டலம், வார்டு-22 மற்றும் 23-ல் இன்று (16.07.2019) துவங்கப்பட்டுள்ளது. ஒரு குழுவிற்கு ஒரு கால்நடை மருத்துவர் வீதம் ஏழு குழுக்கள் இதற்கென பிரத்யேகமாக அமைக்கப்பட்டு தெருநாய்களுக்கு தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. தடுப்பூசி போடப்பட்ட தெருநாய்களுக்கு அடையாளமாக "மை" (Vegetable Dye) தெளிக்கப்படுகிறது. நாளொன்றுக்கு 1,050 தெருநாய்களுக்கு தடுப்பூசி போட திட்டமிடப்பட்டு, இன்று முதல் ஏழு நாட்களுக்குள் மாதவரம் மண்டலத்தில் உள்ள அனைத்து தெருநாய்களுக்கும் தடுப்பூசி போடப்பட்டு முடிக்கப்படும்.

இதன்மூலம் வெறிநாய்க்கடி நோயிலிருந்தும், அக, புற ஒட்டுண்ணி தாக்குதலில் இருந்தும், தெருநாய்களுக்கும் பொதுமக்களுக்கும் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது. மேலும், இதன் தொடர்ச்சியாக அனைத்து மண்டலங்களிலும் இச்சிறப்புத்திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**